# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
## KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION (CANADA)
## 2019

*15 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்*
**பேச்சுப் போட்டி**

## *மாணவர்கள் கடமை*

*"இளமையிற் கல்" என்பது ஔவையார் வாக்கு. அதற்கு இணங்க எங்கள் பெற்றோர்கள் எங்களைப் பாடசாலைக்கு அனுப்பி கல்வி கற்பிக்கின்றார்கள். பாடசாலையில் நாம் ஒழுக்கமாக இருந்து ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை ஒழுங்காகப் படிக்கிறோம். ஆசிரியர் பணிக்கும் வேலைகளைச் செய்கிறோம். திறமையாகவும், ஒழுக்கமாகவும் திகழும் மாணவர்கள் நன்மாணாக்கர் என அழைக்கப்படுகின்றனர்.*

*கனடாவில் பலஇன மக்கள் படிக்கும் பாடசாலைகளில் தமிழ் மாணவர்களாகிய நாம் சேர்ந்து படிக்கிறோம். ஒவ்வொரு இன மாணவர்களும் வித்தியாசமான பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அவ்வாறே தமிழ் மாணவர்களாகிய எங்களது பழக்கவழக்கங்களும் வித்தியாசமானவையே. எப்படி இருந்தாலும் நாம் மாணவர் என்ற நிலையில் அவர்களோடு அன்பாகவும், பண்பாகவும் பழகவேண்டியது அவசியமாகும். ஆனால் எச்சந்தர்ப்பத்திலும் எங்கள் கலாச்சாரத்தை அதன் தனித்துவத்தை மறக்கக்கூடாது. அவ்வாறு நாம் வாழும்போதுதான் எங்களை மற்றவர்கள் தமிழ் மாணவர்களாகக் கருதுவார்கள். எங்கள் சமுதாயத்தின் பெருமையை உணர்வார்கள். "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுவரை" என்பதற்கு இணங்க, மாணவர்களாகிய நாம் இளமையில் இருந்தே எங்கள் பண்பாட்டிற்கு அமைய வாழவேண்டும்.*

*கல்வி கற்கும் மாணவர்களாகிய நாம் "தேன்தரும் நன்மலர்களை நாடிடும் வண்டினம்" போல பயன் தரும் நன்நூல்களைத் தேடிப் படித்தல் வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான அறிவினைத் தரும் நூல்களைக் கற்றிடல் வேண்டும். பாடசாலைகளிலோ அல்லது வேறிடங்களிலோ பண்பாடற்ற மாணவர்களுடன் பழகுவதைத் தவிர்த்தல் வேண்டும். இளமையிற் கற்கும் கல்வி "சிலையிலெழுத்துப்போல்" மனதில் பதியக்கூடியது. அக் கல்வியறிவு வாழ்க்கையில் பயன் தரக்கூடியது. ஆதலால் நம் இளமைப் பருவத்தில் பயனுள்ள பாடநூல்களுடன் வாழ்க்கைக்குத் துணைபுரியும் நூல்களையும், வாழ்க்கையில் நேர்வழி காட்டும் சமய நூல்களையும் கற்றல் வேண்டும்.*

*"கற்க கசடறக் கற்றவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

*என்ற வள்ளுவன் வாக்குக்கமைய இளமையில் அவற்றின் பொருள் அறிந்து கற்க வேண்டும். கற்றதை பின்பற்றிவரின் நம் வாழ்வில் சமுதாயம் போற்றும் நன்மனிதர்களாக நாம் திகழமுடியும்.*

*உண்மையில் மாணவப் பருவத்தில் நாம் எதிர்காலம் பற்றிய சிந்தனை அற்றவர்களாக இருக்கின்றோம். இலகுவில் உணர்ச்சிகளுக்கு ஆட்படும் மனநிலை கொண்டவர்களாக உள்ளோம். ஓர் மாயையான உலகில் சஞ்சரிக்கின்றோம். அதனாற்றான் ஔவைப்பாட்டி மாணவாகளாகிய எங்களுக்கு "மேன்மக்கள் சொற்கேள்" என அறிவுரை கூறியுள்ளார். அதற்கிணங்க தந்தை, தாய், குரு ஆகியோரின் சொற்கேட்டு நாம் வாழவேண்டும்.*

*"அடித்தளம் வலிமையானதாக இருப்பின் கட்டிடம் உறுதியானதாக இருக்கும்" என்பது போல் இளமையிற் கற்கும் கல்வியும், பேணும் ஒழுக்கமும் சிறப்பாக அமையுமாயின் மாணவர்களாகிய எங்கள் வாழ்க்கை என்றென்றும் உறுதியானதாக அமையும். சென்ற இடமெல்லாம் சிறப்பாக வாழமுடியும்.*

நன்றி